அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 02/2017

எனது இலக்கம்: EST/6/06/TVL/3010
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2017.02.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிப்பதற்காக வழங்கப்பட்ட நுழைவுச் சீட்டுக் கட்டணத்தினை ஈடு செய்தல்**

அன்றாட கடமையல்லாத விசேட கடமையொன்றிற்காக அதிகாரி ஒருவர் குறித்த பிரதான கணக்கீட்டு அலுவலர் அல்லது கணக்கீட்டு அலுவலரின் முன் அனுமதியுடன் அதிவேக நெடுஞ்சாலையினைப் பயன்படுத்திய சந்தர்ப்பமொன்றின் போது அதற்காக பயன்படுத்திய வாகனத்திற்காக செலுத்திய நுழைவுச் சீட்டுக் கட்டணம் அல்லது சொகுசு பஸ் வண்டியில் பயணிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்காக செலவிடப்பட்ட நுழைவுச் சீட்டுக் கட்டணத்தினை ஈடு செய்ய முடியும்.

02. அதிவேக நெடுஞ்சாலையினைப் பயன்படுத்துவதனால் சாதாரண பாதைகளைப் பயன்படுத்தும் போது அரசுக்கு ஏற்பதற்கு உள்ள செலவுகளினை விட அதிகளவு செலவினை ஏற்பதற்கு ஏற்படுவதில்லை என்பதனை தனிப்பட்ட வகையில் திருப்தியுற்றதன் பின்னர் அதிகாரி ஒருவருக்கு அதிவேக நெடுஞ்சாலையினைப் பயன்படுத்தி கடமைக்குச் செல்வதற்குரிய முன் அனுமதியினை வழங்குவது உரிய அதிகாரிகளின் பொறுப்பாகும்.

03. இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2017.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும். 2017 ஆம் ஆண்டில் சகல நிறுவனங்களும் தங்களது ஒதுக்கீடுகளில் இதற்காக செலவிடப்படும் செலவீனங்களை முகாமைத்துவம் செய்தல் வேண்டும் என்பதோடு இதற்காக பொதுச் திறைச்சேரியினால் மேலதிக ஒதுக்கீடுகளை கோர வேண்டியதில்லை.

04. இச் சுற்றறிக்கை பொதுச் திறைச்சேரியின் உடன்பாட்டுடன் பிரசுரிக்கப்படுகின்றது.

ஒப்பம்/. ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு